**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-05032021-3582

Volume: 5

Issue: 3

Month: January

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 06.11.2020

Accepted: 17.12.2020

Published: 01.01.2021

Citation:
Karpagam, K. "Woman Charactrazation in Uyirnilam Novel." *Shanlax International Journal of Tamil Research*, vol. 5, no. 3, 2021, pp. 107–16.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i3.3582

*Corresponding Author:
arivumani.elakkia@gmail.com

CC BY NC ND

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Woman Charactrazation in Uyirnilam Novel

**Dr. K. Karpagam**
*Head Master, Muthukaruppan Harijan Higher Secondary School*
*Subbammalpuram, Sillangulam, Tuticorin, Tamil Nadu, India*

**Abstract -** The Uyirnilam novel emphasizes traditional farming that benefits from the use of natural fertilizers in agriculture. Pointing out the disadvantages of using synthetic fertilizers and pesticides. It also sets the stage for the failure and suicidal ideation of artificial agriculture. In this novel, female characters are said to be free-spirited and not subject to social oppression. Women are seen as expressing the feeling of motherhood. It also sets out to point out that adherence to morals is essential to life, even when having a free sexual relationship, while adhering to social norms and exercising sexual restraint.

**Key Words**: Tamil Novels, Melanmai Ponnusamy, Uyirnilam, Natural farming, Motherwood, Sexual, Kamatchi, Senbagam, Rasathi

**References:**

1. Mu.Varatharajan, Ilakkia Marabu, Pari Nilayam, Chennai – 1, 1968
2. Engals, (Tr. N.Dharmarajan), Kudumpam Thanichothu Arasu Agiavtrin Thotram, p.47, Karuthupattarai, Mithesu Valagam, Madurai, 2008
3. Thu.Seenisamy, Thamilil Kappia Kolgai part-1, p.156, Publication Dept. Thanjor Tamil University, 2005
4. Sundransanmuganar, Veedum Vilakum, p.88, Puduvai Painthamil publicataion, Puduvai, 1947,

# உயிர்நிலம் நாவலில் பெண் சித்திரிப்பு

*முனைவர் க. கற்பகம்*
தலைமை ஆசிரியர்
முத்துக்கருப்பன் அரிசன மேல்நிலைப்பள்ளி
சுப்பம்மாள்புரம், சில்லாங்குளம், தூத்துக்குடி

***ஆய்வுச் சுருக்கம்:*** *உயிர்நிலம் நாவலானது வேளாண்மையில் இயற்கையான உரங்களைப் பயன்படுத்தி பலன்பெறும் மரபான விவசாயத்தை வலியுறுத்தி அமைந்தது. செயற்கை உரங்களையும், பூச்சி மருந்துகளையும் பயன்படுத்துவதினால் ஏற்படும் தீமைகளை சுட்டிக் காட்டக் கூடியது. மேலும் செயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு தோல்வியுற்று தற்கொலை செய்து கொள்ளும் நிலையைப் பற்றிக் கூறுவதாகவும் அமைகிறது. இந்நாவலில் பெண் பாத்திரங்கள் ஆணியச் சமூக ஒடுக்குமுறைக்கு இலக்காகும் தன்மையில் இல்லாதவாறு சுதந்திர மனப்பான்மையுடையவர்களாக கூறப்பட்டுள்ளனர். தாய்மை உணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் பெண்கள் காணப்படுகின்றனர். பாலியல் தன்மையில் சுதந்தரமான உறவை மேற்கொண்டிருந்தாலும் சமூக நியதிகளைக் கடைபிடித்து பாலியல் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளும் வகையிலும் ஒழுக்கத் தினைக் கடைபிடிப்பதே வாழ்விற்கு இன்றியமையாதது என்பதையும் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது.*

***முக்கியச் சொற்கள் :*** *தமிழ் நாவல், மேலாண்மை பொன்னுச்சாமி, உயிர்நிலம், இயற்கை வேளாண்மை, தாய்மை, பாலுறவு, காமாட்சி, செண்பகம், ராசாத்தி*

## முன்னுரை

தமிழில் நாவல் வரலாற்றில் வட்டார இலக்கியத்தன்மையில் கரிசல் வாழ்வை ஆவணப்படுத்தியவர் மேலாண்மை பொன்னுச்சாமி ஆவார். இவருடைய நாவல்கள் கடைநிலை வர்க்கத்தவர்களான விவசாயம், வணிகம் சார்ந்து வாழ்கின்ற மக்களின் அன்றாடச் செயல்பாடுகளையும் அவர்களது வாழ்க்கைப்பாடுகளையும் மையப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளன. மேலாண்மை பொன்னுச்சாமியின் நாவல்களில் பெண்களின் சித்திரிப்பு மிகவும் இன்றியமையாத இடத்தினைப் பெறுகின்றன. தமிழ்ப் புதினங்களில் பெண் பாத்திரப் படைப்புகள் நிலவுடைமைப் பண்புகளை வெளிப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன. பெண்களின் வாழ்வானது குடும்ப அமைப்பினாலும், சமயத்தினாலும், திருமணம் போன்ற சடங்குகளினாலும் பெரிதும் கட்டுப்படுத்தப்படும் வகையில் இருப்பதையே சித்திரிக்கின்றன. இத்தகைய மரபான சமூக அமைப்பில் திருமணம், பாலுறவு போன்றவற்றில் பெண்ணின் பாலியல் ஒழுங்குகள் சமூகத்தவரால் கண்காணிப்புக்கு உட்படுகிறது. ஆணின் பாலியல் சார்ந்த ஒழுக்கங்கள் குற்றமாகப் பார்க்கப்படாத நிலையில் பெண்ணின் பாலியல் திருமண உறவின்மூலம் மட்டுமே பெறக்கூடியதாக அமைகிறது. பால்நிலைச் சமத்துவத்தைப் பேணும் இடதுசாரியச் சிந்தனைகளை உள்வாங்கிய மேலாண்மை பொன்னுச்சாமியின் உயிர் நிலம் நாவலானது இயற்கையையும், பெண்ணையும் சமமாகக் கருதும் நோக்கை வெளிப்படுத்துகிறது. பெண் பாத்திரத்தின் வடிவமைப்பும் வேளாண்மைச் செயல்பாடுகளும் ஒன்றிணைந்ததன்மையில் காணப்படுகின்றன.

முறையற்ற நடத்தைகளின் காரணமாகப் பெண்ணின் மீது சமூகம் கறையை தெளிப்பது போல இயற்கையாக வேளாண்மை செய்வதற்குப் பதிலாக உரம், பூச்சிக்கொல்லி மருந்து போன்றவற்றைப் பயன்படுத்தும்போது மண்தன் இயல்பானதன்மையை இழப்பதை வெளிப்படுத்துகிறார். முறையற்ற பாலுறவு பெண்ணுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதாக அமைகிறது. அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் பெண்களுடன் பாலுறவை மேற்கொள்ளும், அழகேசன், முருகேசன் ஆகியோர் செண்பகம், ராசாத்தி ஆகியோராலேயே திருத்தப் படுகின்றனர். பரமசிவம் அதற்குப் பின்னணியில் இருக்கிறார். பரமசிவத்தை பகைத்துக்கொண்டு நவீன வேளாண்மை முறைகளைக் கைக்கொள்ளும் முருகேசன் வேளாண்மையில் தோல்வி அடைவதைச் சுட்டிக்காட்டுகிறார். இயற்கை வேளாண்மை என்பது ஆணின் உழைப்பினால் பெறக்கூடியதாகவும், செயற்கை உரம், பூச்சிக்கொல்லி ஆகியவற்றைப் பயன்படுத்தி வேளாண்மை செய்வது மண்ணை மலடாக்கும் செயல் என்றும் குறிப்பிடுகிறார். இக்கட்டுரையில் உயிர்நிலம் நாவலில் பெண் பாத்திரப் படைப்பின் தன்மைகள் குறித்து எடுத்துரைக்கப்படுகின்றன.

## பாத்திர படைப்பு

சமூக நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு புனைவுகளைச் செய்கின்ற படைப்பாளர்கள் சமூகத்தின் வகைமாதிரி பாத்திரங்களைத் தம் படைப்புகளில் வெளிப்படுத்துகின்றனர். பாத்திர படைப்பு என்பது கதையின் தன்மைக்கு ஏற்ப வடிவமைக்கப்படுகின்றது. படைப்பாளர்களுக்கு தம் வாழ்வில் குறிக்கோள்கள் காணப்படலாம். அவற்றை தாம் படைக்கும் பாத்திரங்களின் வழி வெளிப்படுத்துவர் "கலைஞர் ஒவ்வொருவர்க்கும் வாழ்க்கையில் சில கொள்கைகளும் குறிக்கோள்களும் உண்டு ஆகையால் அந்தக் கொள்கைகளும் குறிக்கோள்களும் எவ்வாறேனும் அவர்களின் கலைப் படைப்பில் இடம்பெற்றுவிடும். கதைமாந்தரின் வாயிலாக அந்தக் கொள்கைகள் விளங்குமாறு செய்யலாம். அந்தக் கொள்கைகள் அக்கதைமாந்தரின் பண்பு முதலியவற்றோடு ஒட்டியனவாக இருத்தல் வேண்டும்"[1] என்ற கூற்றிலிருந்து மேலாண்மை பொன்னுச்சாமியின் கொள்கை, குறிக்கோள்களுக்கு ஏற்ப பாத்திரங்களை உயிர்நிலம் நாவலில் படைத்துள்ளார். பரமசிவம், காமாட்சி இணையர் நாவலில் முழுமையாக வியாபித்துள்ளனர். அதில் பெண் பாத்திரமான காமாட்சி ஆண் தலைமைப் பாத்திரமான பரமசிவத்தின் அனைத்து வளர்ச்சிக்கும் காரணமானவளாகச் சுட்டப்படுகிறாள்.

## பெண் பாத்திர முதன்மை

காப்பியங்களில் பெண் பாத்திரங்களுக்கு முதன்மையளிக்கும் பாங்கினைக் காப்பியக் கூறாகக் கொண்டிருப்பதைக் காணலாம். நாவல்களும் காவியத்தன்மை கொண்டவைதாம். அவற்றிலும் பெண் பாத்திரங்களுக்கு முதன்மையளிக்கும் பாங்கினைக் காணலாம். "இரண்டு கவிஞர்களும் பெண்ணிற்குத் தலைமைப் பாத்திரம் அளித்துள்ளனர். மணிமேகலை முழுவதுமாக நேரடிச் சீர்திருத்தத்தில் ஈடுபடுபவளாகப் படைக்கப்பட்டுள்ளாள். கண்ணகியோ ஊழ் உண்மையை உணர்த்தக் கூடிய வாழ்விற்குரிய குறியீடாகவே படைக்கப்பட்டுள்ளாள். தவிர இளங்கோவும் சாத்தனாரும் தம் கொள்கை விளக்கத்திற்கெனப் பல பெண் பாத்திரங்களைப் படைத்துக் கொண்டுள்ளனர்"[3] என்று தமிழின் இரட்டைக் காப்பியங்களில் பெண் பாத்திரங்களுக்கு அளிக்கப்பட்ட முதன்மை குறித்துக் கூறப்படுகிறது. மேலாண்மைப் பொன்னுச்சாமியும் தன் கொள்கை விளக்கத்தினை வெளிப்படுத்த காமாட்சி, செண்பகம், ராசாத்தி போன்ற பெண் பாத்திரங்களை படைத்துள்ளார். பரமசிவம் தான் தலைமைப் பாத்திரம்

என்றாலும் அப்பாத்திரத்துக்கு இணையாக காமாட்சி என்னும் பெண் பாத்திரத்தையும் படைத்துள்ளார். நாவலில் காமாட்சியைப் பரமசிவம் தனக்கு இணையான மதிப்பினை அளிக்கும் வகையில் உரையாடல்கள் அமைகின்றன. திருமணமாகிவந்தகாமாட்சியைப் பற்றி "பரமசிவத்துக்கு அப்பத்தான் கலியாணம் நடந்திருந்தது. காமாட்சி நல்ல கறுப்பு, கண்ணுக்குக் குளிர்ச்சியான கறுப்பு. லட்சணமான முகம். கச்சிதமாக அமைந்த உதடுகளே தனியழகு. பெரிய சம்சாரி வீட்டுப் பெண். காடுகரைகளில் பாடுபட்டுப் பழகியவள். வெயிலுக்குள் நிலா வெளிச்சம்போலத் திரிகிறவள். காய்ப்பேறிப் போன உள்ளங்கைகளுடன் வந்தவள் (உயிர்.33) என்று அவளுடைய உழைக்கும் திறன் கூறப்படுகிறது. பரமசிவத்திடம் ஆசாரி காமாட்சியைப் பற்றிக் கூறுகிறார் "காமாட்சி ஒனக்கு மகாலட்சுமியப்பா, ஒன்னை மாதிரியே ஓய்ஞ் சறியாத பாட்டாளி, பாடுபடுறதுலே சொகம் பாக்குற சீதேவி. அவா யோகத்துக்கு ஒனக்கு ஏறுகால்தான். சுக்கிரதிசை உச்சத்துல நடக்கும். வந்தது பூராத்தையும் வாங்கிப் போடலாம். வழி தானா திறக்கும்" (உயிர்.43) என்று கூறுவதைக் காணலாம். அவள் கம்பு குற்றி உணவு சமைக்கும் விதத்தை "கைமாற்றி உலக்கை போடுவதில் காமாட்சி கெட்டிக்காரி. இடக்கையால் உயர்த்திக் கீழேவிட்ட வேகத்தில் வலது கைப்பற்றும் உலக்கையைப் பற்றிய வேகத்தில் உயர்த்திக் கீழே ணக் கென்று இறக்குவாள். கம்புகள் குலுங்கும். குலுங்குகிற கம்பு உரலை விட்டு வெளியே துள்ளாமலிருக்க வட்டமான உறைப் பெட்டியை வைத்திருப்பாள்" (உயிர்.51) என்று கூறப்படுகிறாள். நிலத்தில் குப்பை அள்ளி வீசுவதில் பரமசிவத்தை மிஞ்சுகிறாள் காமாட்சி "அதேமாதிரி அடுத்த நடையில் அவள் ஜெயித்து விட்டாள். கூடையைத் தூக்கி வண்டியில் தட்டி விட்டுத் திரும்ப வரும்போது அள்ளி முடித்துவிட்டு மம்மட்டியை ஊன்றி நின்றாள். வியர்வைக் கசிவு, முழுவதும் குப்பையின் கரும் குழைவு. மூச்சிரைப்போடு வெற்றிப் புன்னகை செய்கிற காமாட்சி" (உயிர்.68) என்று அவளது திறன் பற்றி கூறப்படுகிறது. காமாட்சியின் உழைக்கும் திறனைக்கொண்டு ஆணை விடப் பெண்தான் வலுவானவள் என்று தன் கொள்கையைப் பரமசிவத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். ஆவாரங்கொழையும், கொளஞ்சியும் அறுத்துக் கட்டிய பரமசிவம் தன் மனைவி காமாட்சி அறுத்துக்கட்டிய கட்டுகளைக் கண்டு அவளது பலம் பற்றிக் கூறுகிறார் "பொம்பளைகிட்டே ஆம்பளை ஜெயிக்க முடியுமா? மனபலத்துலேயும் ஒடல் பலத்துலேயும் ஆம்பள பொம்பளையை மிஞ்சிர முடியாது" கேலி கிண்டல் நக்கல் நையாண்டியை யெல்லாம் விட்டு விலகிய தீவிர அறிவுக்குரல், "ஒடல் பலத்துலேயுமா" "ஆமா மாதவிலக்கு.. பிள்ளைப்பேறு கர்ப்பச்சுமை இதெல்லாம் இருந்துமே இம்புட்டு பலம் இருக்குன்னா இதெல்லாம் இல்லாட்டா ஆம்பளைகள பொம்பளைக பலத்துல தூக்கி சாப்புட்டுட்டுப் போயிருவாக". "அப்பன்னா பொம்பள வலுவானவளங்குறீகளா?" "என்னைக் கேட்டா ஆதிகாலத்துலே பொம்பளையே எல்லா எடத்துலேயும் வலுவானவளா அதிகாரம் பண்ணியிருக்கணும். குடும்பத்துலே, ஊர்லே மனுச மக்க மத்தியிலே பொம்பளை ராஜ்யந்தான் நடந்துருக்கணும்" "எதை வச்சு சொல்லுதீக" "பொம்பளையை சக்திங்குறாங்க.. அம்மன் தெய்வங்களை பக்தியோட கும்புட்டு வணங்குறாங்க. பொம்பள ராஜ்யம் இருந்து மங்கிப்போய்த்தான் அம்மா சாமி கும்புடறதா வந்து நிக்குது" (உயிர்.101-102) என்று பரமசிவம், காமாட்சி இடையேயான உரையாடல் வழி பெண் வலுவானவள் என்றும் மனிதப் படிமலர்ச்சியில் பெண்வழிச்

சமூகம் இருந்ததையும் அனைத்துப் பணிகளிலும் பெண்கள் முன்னின்றதையும் எடுத்துக்காட்டுகிறார். ஆசிரியர் எங்கெல்சின் குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் குறித்த சிந்தனைகளையே இவ்வாறு கூறுகிறார். எங்கெல்ஸ் ஆதியில் பெண்வழிச் சமூகமாக இருந்ததைப் பற்றி எடுத்துரைக்கிறார் "செல்வம் பெருகிய பொழுது அது ஒரு பக்கத்தில் குடும்பத்தில் பெண்ணைவிட ஆணுக்கு முக்கியமான தகுதியைக் கொடுத்தது. மறுபக்கத்தில் தனது குழந்தைகளுக்குச் சாதகமான வழியில் பரம்பரை வாரிசுமுறையை மாற்ற இந்த வலுப்பெற்ற நிலையைப் பயன்படுத்திக் கொள்ள ஆணுக்கு ஒரு தூண்டுதலை அளித்தது. ஆனால் தாயுரிமைப்படி மரபு வழி இருந்தவரை இப்படி நடக்க முடியாது. ஆகவே தாயுரிமையைத் தூக்கியெறிய வேண்டியதாயிற்று. அது தூக்கியெறியப்பட் டது"[2] என்று குறிப்பிடுகிறார். தாயுரிமை என்பது தாய்வழிச் சமூகத்தைக் குறிக்கிறது. தாய்த்தலைமை ஆட்சி என்று இதனைக் குறிப்பிடுகின்றனர். அனைத்துப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட வலுவுள்ளவளாகப் பெண் இருந்தாள் என்பதையே இது காட்டுகிறது. இத்தகைய பெண்ணின் வலிமையைத்தான் மேலாண்மை பொன்னுச்சாமி உயிர் நிலம் நாவலில் காமாட்சி மூலம் வெளிப்படுத்துகிறார்.

### தாய்மை உணர்ச்சியில் காமாட்சி

குடும்பத்தில் தந்தையினால் குழந்தைகள் கண்டிக்கப்பட்டாலும் தாய் தன் பிள்ளைகளின் மேல் அன்பைக் காட்டத் தயங்கமாட்டார்கள் "குற்றம்செய்த பிள்ளைகளைச் சில தந்தைமார்கள் அடித்துத் துரத்தி விடுவதுண்டு. அந்நிலையில் தாய்மார்கள் தந்தைக்குத் தெரியாமல் அல்லது பிள்ளையிருக்கும் இடத்தைத் தாமே தேடியடைந்து உணவு கொடுப்பதுண்டு"[4] என்று தாயன்பு குறித்துக் குறிப்பிடுகிறார் சுந்தரஞ்சண்முகனார். உயிர்நிலம் நாவலிலும் தந்தையால் புறக்கணிக்கப்பட்டவனாக முருகேசன் காணப்படுகிறான். அவராக அவனைப் புறக்கணிக்கவில்லை. அவன் தனக்கு நிலத்தைப் பிரித்துத் தரும்படி ஊராரிடம் பஞ்சாயத்து வைத்து விட்டான். அந்தக் கோபத்தில் அவன் மேல் கடுமையாக நடந்து கொள்கிறார். ஆயினும் அவன் விபத்தில் சிக்குண்டான் என்பதறிந்து அங்கு செல்லத் தவறுவதில்லை. காமாட்சி முருகேசனின் இந்தநிலைக்குப் பரமசிவம்தான் காரணமென அவரை வசைபாடுகிறாள். நாவலில் காமாட்சியின் தாய்மையை வெளிப்படுத்துவதிலும் மரபான தாயாகக் காட்டுகிறார். தன் மகன் முருகேசன் விபத்துக்கு ஆளாகி இருந்த நேரத்தில் அவனைப் பார்ப்பதற்காகச் செல்லும் பரமசிவம் அவன் முகத்தில்கூட விழிக்கக் கூடாது என்று வைராக்கியத்தோடு இருந்தவர். அவர் அவனிடம் எதுவும் பேச வில்லை. ஆனால் காமாட்சி தன் மகன் விபத்தில் அடிபட்டு விட்டானே என்ற பதைப்பை வெளிக்காட்டுகிறாள். அவன் உடம்புக்குச் சுகமில்லாமல் இருக்கிறான் என்ற செய்தியைக் கேட்டதும் "ஐயோ ஐயய்யோ என் வவுத்துத் தங்கப் பெட்டியே என்னைப் பெத்த ராசாவே எங்கேயா இருக்கே ஒப்பாரி வைத்துக் கதறுகிற காமாட்சி. ஓங்காரமாக அலறி அழுகிற அவள். தலையிலும் மார்பிலும் ரெண்டு கையாலும் மாறி மாறி அடித்துக்கொண்டு கதறுகிற காமாட்சி" (உயிர்.22) என்று மகனின் நிலையினை எண்ணி அலறுகிறாள். தன் கணவன் அவனை விளங்காமல் போய் விடுவான் என்று பேசியதால்தான் அவனுக்கு இந்த நிலை ஏற்பட்டது என்று கணவனை வசைபாடுகிறாள் "ஐயோ பாவி நீயெல்லாம் ஒரு தகப்பனா வாய்க்கு வாய் வெளங்காமப் போயிருவான், வெளங்காமப் போயிருவான்னு பெத்த

புள்ளைய சபிச்சீகளே கரிச்சுக் கொட்டுனீகளே.. உங்க நாக்கு வாக்கு பலிச்சிருச்சா? இப்ப உங்களுக்குத் திருப்தியா ஏம்புள்ளைய வெறுத்து வெறுத்து ஒதுக்குனீங்களே உருப்படமாட்டான், உருப்படமாட்டான்னு கரிச்சுக் கொட்டுனீகளே அடப்பாவி பெத்த புள்ளைய வாய்லே போட்டு மென்னு துப்புனீயே நீயெல்லாம் ஒரு மனுசனா" (உயிர்.22) என்று வசைபாடுகிறாள், காமாட்சி. மகன் மீது கரிசனை காட்டும் தாயாகக் காமாட்சி இருந்தாலும் அவள் முருகேசனைப் பற்றி பேச்செடுத்தாலே எரிந்து விழுகிறார் பரமசிவம். "இந்த மனுசரோட மனசைக் கரைக்கவே முடியாதா? எளையவன் முருகேசனை மன்னிக்கவே மாட்டாரா? அவளுக்குள் அச்ச நிழலிருட்டு கற்றை கற்றையான பழைய நினைவுகள், அவர் போட்ட சத்தக்காட்டில் அரண்டு போன காமாட்சி இன்னும் மீளமுடியாமல் தத்தளிக்கிறாள்" (உயிர்.107) என்று காமாட்சி மகனுக்காகப் பரமசிவத்திடம் வசைபடுகிறாள். மூத்தவன் அழகேசன் மீதும் அவள் அன்பும் கரிசனையும் உடையவள்தான். அழகேசனின் போக்கினைக் கண்டு வருத்தம் கொள்கிறாள். அவன் தம் புஞ்சையில் வேலை பார்க்கும் விதவையான ராசாத்தியுடன் முறையற்ற பாலுறவு வைத்துள்ளான் என்பதை நினைத்து வருந்துகிறாள். ஆயினும் அதனை வெளிப்படையாகக் கூறாமல் இருக்கிறாள். "அந்தப் பய ஊரைக்கூட்டி குடும்பத்தைத் தலைகுனிய வைச்சான். இந்தப் பய என்ன கூத்து கட்டக் காத்திருக்கானோ தெரியல்லயே என்று அடிமனசில் புலம்புகிற காமாட்சி" (உயிர். 348) என்று எண்ணுகிறாள். ஆயினும் அவள் அவனிடம் நேரடியாகக் கேட்டு அவனை திருத்துவதில்லை. காமாட்சியின் பாத்திரம் தாய்மை உணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

**பாலுறவும் பெண்களும்**

சமுதாயத்தில் ஆண்களுக்கு இருக்கின்ற பாலுறவுச் சுதந்திரம் பெண்களுக்கு இருப்பதில்லை. இனக்குழுச் சமுதாயத்தில் பெண்களின் பாலுறவு கட்டுப்பாடுடையதாக இருக்கவில்லை. உடைமைச் சமூகத்தில் பெண்ணின் பாலியல் கட்டுப்பாட்டுக்குரியதாக மாறியது. கற்புக் கோட்பாட்டின் மூலம் பெண்ணின் பாலியல் கட்டுப்படுத்தப்பட்டது. ஒரு கணவனுக்கு மட்டுமே தன் பாலியல் செயல்பாட்டை முழுமையாகத் தர வேண்டியவள் ஆனாள் பெண். திருமணத்திற்கு முந்தைய பாலுறவுகள் குடும்பத்திற்கு இழுக்கானதாகக் கருதப்பட்டன. பெண் கணவனல்லாத பிறருடன் பாலுறவை மேற்கொள்வது சமூகத் தீமையாகக் கருதப்பட்டது."ஒழுகலாறுகளுக்குக்கட்டுப்பட்டுத் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்ள இயலாதவர்கள் கட்டுப்பாடுகளை மீறிப் பாலியல் நடவடிக்கைகளில் துணிந்தோ, மறைமுகமாகவோ தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். அவ்வாறு ஈடுபடுதல் சமூகத் தகுதி மதிப்பு இவற்றுக்குப் புறனானதாகக் கருதப்படுகின்றது. இந்தியச் சூழலில் ஆணுக்குச் சில சலுகைகள் கிடைக்கவே செய்கின்றன. பெண்ணின் செயல்தளம் முற்றிலுமாக வரையறுக்கப்பட்டதாகவே இருந்து வருகின்றது"[5] என்று குறிப்பிடுவதன் மூலம் ஆண் பாலியல் உறவுகளைத் குடும்பத்திற்கு வெளியே அல்லது திருமணமான பின்னோ, அதற்கு முன்னரோ வேறு பெண்களுடன் வைத்துக் கொள்வதைச் சமூகம் அனுமதிக்கிறது. பெண்ணுக்கு அத்தகைய அனுமதியைச் சமூகம் தருவதில்லை. குடும்ப அமைப்பிற்கு வெளியில் பாலுறவை மேற்கொள்ளும் பெண் மீது கடுமையான மதிப்பிறக்கத்துக்குஉள்ளாகிறாள். உயிர்நிலம்நாவலானது இரண்டுவகையான பாலுறவுச்சிக்கல்களை வெளிப்படுத்துகிறது. திருமணத்திற்கு முன் ஆண், பெண் இருவர் தமக்குள் பாலுறவை

வைத்துக்கொள்வது. திருமணத்திற்குப் பின் ஆண், பெண் பாலுறவை மேற்கொள்வது, இதனோடு சேராத மூன்றாவது வகையாக கணவன் இறந்த பின் ஒரு பெண் பாலுறவை மேற்கொள்வது. திருமணமான பின் ஆண், பெண் சமூக ஏற்புடன் பாலுறவை மேற்கொள்வது குறித்த சித்தரிப்பில் பரம சிவம், காமாட்சி இருவரிடையேயான பாலுறவுச் சூழல்கள் கூறப்படுகின்றன. பரமசிவத்திற்கு தன்னைக் குழைவாக அனுமதிக்கும் மனைவியாக காமாட்சி இருக்கிறாள். "கோதியள்ளிய வேகத்தில் அவளைத் தன் உடம்போடு இறுகத் தழுவிச் சுழற்றினான். அவளது சிரிப்பின் சலங்கைச் சத்தம். கழற்றிவிட்டு நட்டுக்க நிறுத்தினான். அப்படியே முகத்தைக் கவ்விய முகம், முகம் முழுக்க அவனது எச்சில். கள்ளமில்லாமல் சிரிக்கின்ற மோகனப் புன்னகை, உதடு களைக் கவ்வுகிறபோது உடன்படுகிற அவளது குழைவு. சேலையை விலக்குகிற அவன். அவளைத் தனியாக விலக்கி நிறுத்தி காமாட்சியை ரசிக்கிற அவன். இது ஒரு விநோதம் கொடுப்பவர் பெறுகிறவராகவும், பெறுகிறபோதே கொடுப்பவராகவுமுள்ள விநோத உறவு, இன்பமே வேதயையாகவும், வேதனையே இன்பமாகவும், வித்தி யாசமான பரிவர்த்தனை" (உயிர்.34-35) என்று இருவரும் கொள்கிற பாலுறவு சித்திரிக்கப்படுகிறது. இது முறையான பாலுறவு என்பதால் சமூக ஏற்பினை உடையதாகிறது.

பரமசிவத்தின் மகன் முருகேசனுக்கும் மீனாக்காவின் மகள் செண்பகத்திற்கும் இடையேயுள்ள பாலுறவானது மறைவான இடங்களில் நடைபெறுகிறது. அவர்கள் இருவரும் இடிகிணற்றில் சந்தித்துக் கொள்ளும்போதெல்லாம் பாலுறவில் ஈடுபடுகின்றனர். சில நேரங்களில் செண்பகம் தான் கர்ப்பமாகி விடுவோம் என்று அஞ்சுகிறாள். திருமணத்திற்கு முன்பாக ஒரு பெண் கர்ப்பம் தரிப்பதை சமூகம் ஏற்காது என்பதால் அவள் அஞ்சுகிறாள். இருவரும் இடிகிணற்றில் சந்தித்துக் கொள்வதைப் பற்றி "எடுத்த எடுப்பிலேயே இடிகிணத்துக்கு வா என்பதா? அதுக்குத்தான் என்று சொல்வதா சந்தேகமில்லாமல் சஞ்சலமில்லாமல் ஓர் எடுப்பு தொடுப்பு, முடிப்பு இல்லாமல் மெல்ல மெல்ல இங்கிதமாகப் பழகி பேசி பல நாள் பழகி ஒரு மயக்க தருணத்து சறுக்கலில் நிகழ வேண்டிய விபத்தை விபரீதத்தை எத்தனை சாதாரணமாக அலட்சியமாக சொல்லி விட்டுப்போகிறான்" (உயிர்.190) என்று நினைக்கிறாள் செண்பகம். காதல் உணர்வுகளை மெல்லமெல்லப் பயின்று அதன்பின்பே பாலுறவை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இதில் வெளிப்படுகிறது. திருமணத்தின் முன்பான பாலுறவை அவள் விபத்தென்றும் விபரீதமென்றும் கருதுகிறாள். "முதல் தனிமையே உடல் சந்திப்பாகத்தான் அமைந்தது. தவறாத உடல் சந்திப்புகள் தித்திப்பான சந்திப்புகள் சமூகம் குறித்த பயத்தையெல்லாம் அண்டவிடாத மயக்க சந்திப்புகள்" (உயிர்.191) என்னும் வரிகள் திருமணத் திற்கு முந்தைய பாலுறவால் சமூகத்தில் மதிப்பிறக்கம் ஏற்படும் என்ற எண்ணம் வெளிப்படுத்தப்படுகிறது. பெண்ணின் பாலிச்சையை வெளிப்படுத்துவதில் ஆணுக்கு இணையான தன்மையை பெண்ணுக்கும் ஆசிரியர் வழங்குகிறார். இடிகிணற்றில் செண்பகம், முருகேசனுடன் இணையும்போது "ஆர்ப்பரிக்கிற அவள் ஆவேசமடைகிற அவள் எல்லை தாண்டுகிற அவள், எல்லை தாண்ட வைக்கிற அவள்" (உயிர்.228) என்று அவளது செயல்பாடு கூறப்படுகிறது. ஆணின் செயல்பாடுகளும் இவ்வாறே கூறப்படுகிறது. அடங்கிய பாலியல் பாத்திரமாகப் பொதுவாக படைக்கப்படுவதிலிருந்து வேறுபட்டு அமைகிறது. ஆனாலும் கரு தங்கினால்

தலைகுனிவு ஏற்படும் என்ற அச்சத்தை செண்பகம் முருகேசனிடம் வெளிப்படுத்துகிறாள். "என்னோட உசுரு, ஒடம்பு, மானம் எல்லாத்தையும் ராசாவோட காலடியிலே எப்பவோ ஒப்படைச்சுட்டேன். ராசா இஷ்டம்தான் எல்லாம். எனக்கு என்ன ஆனாலும் கவலையில்லே. என்னோட ராசாவுக்குத் தலைகுனிவு வந்துரக் கூடாதேன்னு தான் பயப்படுதேன். "எனக்கு என்ன தலைக்குனிவு" "வவுத்துலே தங்கிட்டா ஒங்களுக்குத் தலைக்குனிவுதானே" "ஆமா" "மாதவிலக்காசி தூரமாய்ப் போய் ஏழு பொழுதுகூட ஆகலே இப்ப நாம ஏதாச்சும் பண்ணுனா வவுத்துலே தங்கிடும் அப்படித்தங்கிட்டா வர்ற இழிவை என் ராசா தாங்குவாரா தாங்கலாமா" *(உயிர்.230-231)* என்று கூறுகிறாள் செண்பகம். இருவரிடையேயான பாலுறவு முறையற்றது என்பதை இது வெளிக் காட்டுகிறது. இருவரிடையேயான இப்பாலுறவு பின்பு செண்பகத்தால் தடுத்து நிறுத்தப்படுகிறது.

அழகேசன், ராசாத்தி இடையேயான பாலுறவும் பிரச்சினைக்குரியதாக இருந்தாலும் அவள் கணவனை இழந்தவள். அவளுக்கும் உணர்ச்சிகள் இருக்கும் என்றவகையிலே அவளது பாலுறவைத் தேவையை நிறைவுசெய்பவனாகஅழகேசன் இருக்கிறான். அவள் தூக்கி வளர்த்த பையனாகத் தெரிந்தாலும் வளர்ந்துவிட்ட அழகேசனைத் தனக்குள் உள்வாங்கிக் கொள்கிறாள். தொடக்கத்தில் அவளிடம் அவன் தவறாக நடக்க முற்பட்டதை அவள் ஏற்கவில்லை. அவனும் அவளிடம் தான் முறையற்ற நடந்ததற்கான வருந்துகிறான். அவளைத் தேடிச்சென்று மன்னிப்புக் கேட்கிறபோது அவள் அவனைத் தன் பாலியல் இச்சைக்குப் பயன்படுத்திக் கொள்கிறாள். அவனும் அதை ஏற்கிறான். ஆனாலும் அவள் மனதிற்குள் தன் மகளின் எதிர்காலம் குறித்த அச்சம் இருக்கிறது. தாய் முறையற்றுப் போனால் மகளையும் அதேபோல எண்ணி விடுவார்கள். அவளது வாழ்க்கை பாதிக்கப்படும் என்று கருதுகிறாள். அழகேசன் தன்னிடம் முறையற்று நடந்ததைப் பற்றி "அழகே", அழகேசு என்று இவள் கூப்பிடுகிறபோதெல்லாம் உள்மனசுக்குள் ஓர் உடன்பிறப்பு என்ற உணர்வுதான் எழும். உடன்பிறக்காத இளைய தம்பி என்று நினைப்பாள். அவன் மனசிலா இம்புட்டு அழுக்கு. அவனுக்குள் இப்படியோர் எண்ணமா அடச்சீ அக்காளா நெனச்சிருக்க வேண்டியவளை வெறும் பொம்பளையா எப்படி நெனக்க முடிஞ்சது. இல்லாதவன் பொண்டாட்டி எல்லாருக்கும் மதினிம்பாக. இந்தப் பயலுக்கு என்னப் பத்தி எல்லாமே தெரியுமே" *(உயிர்.305)* என்று எண்ணுகிறாள். அவன் அவளிடம் மன்னிப்புக் கேட்க வந்தபோது தன்னை அவனிடம் இழந்துவிடுகிறாள். "படுத்த நிலையிலேயே கையெடுத்துக் கும்பிடுகிற அழகேசன். மயினி நா மனுசப் பயலேயில்லே மிருகமா நடந்து கிட்டேன். அரை நொடியிலே மதிகெட்டுப் போயிட்டேன். மன்னிச்சேன்னு நீங்க சொன்னாத்தான். கும்புட்ட கைய எடுப்பேன். கண் கலங்குகிற அழகேசன்" *(உயிர். 313)* என்று அழகேசன் தான் நடந்து கொண்ட முறைக்காக வருந்துகிறான். ஆனால் அவள் "ஏங்கிட்டே ஒனக்கு இல்லாத உரிமையா கண்ணு" *(உயிர்.318)* என்று அவனுக்குத் தன்னைவிட்டுத் தருகிறாள். இருவரிடையேயான இந்த உறவு வெளித் தெரிந்தால் தன் மகளின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்ற எண்ணத்தில் அழகேசனுடன் தன் உறவை முறித்துக் கொள்கிறாள். அவன் அவளது வீட்டை அடைந்ததும். அவளை அழைக்கிறான். அவள் "என்னத்துக்கு வந்தே வழக்கமில்லாத கேள்வி. அதுவும் இறுகலான கோபக்குரல், அடைக்கோழியின் சிடுசிடுப்பு. "வந்தா

வைச்சுத் தாரேன்னு சொன்னீகளே சாயங்காலம்கூட அயத்துட்டீங்களா (மறந்துட்டீகளா)" "அயத்துட்டேன் நா பலதையும் அயத்துட்டேன். என்னோட வயசை அயத்துட்டேன். கட்டிக்குடுத்துருக்குற எம் மகளை அயத்துட்டேன். தூக்கிச் சுமந்த சின்னப் பயலுக்கு முந்திச் சீலை விரிக்ககுறது கேவலங்குறை அயத்துட்டேன். ஒடம்புச் சுகத்திலே மான சுரணையை அயத்துட்டேன். மானங்கெட்டு சொகங்கண்டு மகளோட வாழ்க்கையை அழிக்கிற பாவத்தை அயத்துட்டேன். போதும்யா அயத்தது போதும் அயத்துரய்யா என்னை இந்த நெனப்பையே அயத்துருயா இந்த சகவா சத்தையே அயத்துருயா" (உயிர்.355) என்று அழுகிறாள். தன் வாழ்க்கையும் அவனது வாழ்க்கையும், தன் மகளின் வாழ்க்கையும் கூட சமூகத்தில் பாதிக்கப்படும் என்கிற எண்ணத்தை வெளிப்படுத்துகிறாள். ஆணிற்கு வழங்கப்படும் பாலியல் சுதந்திரம் பெண்ணுக்கு வழங்கப்படாத நிலையைப் பற்றியும் அவள் எண்ணுகிறாள். "இது ஆண்களின் காலம். ஆளுவதும் அத்துமீறுவதும் அனுபவிப்பதும் எல்லாமே ஆண்கள். அகப்பட்டுக்கொண்டால் தண்டனைக்குப் பெண் மட்டுமே பலியாக வேண்டும். இது என்ன கொடுமை பந்தத்தின் மூலமாக மிரட்டுகிற மருமகன். பாசத்தில் மிரட்டுகிற பரமசிவம். எல்லாம் செய்த கயவன் சத்தமில்லாமல் ஒதுங்கிக் கொண்ட அழகேசன். என்ன செய்ய இது ஆண்களின் காலம் அவர்கள் ஆதிக்கக் காலம்" (உயிர்.384) என்று எண்ணுகிறாள். ஆண்களால் வடிவமைக்கப்பட்ட கருத்தியல்களாக குடும்பம், பெண்ணின் கற்பு, பாலியல் உறவுகள் ஆகியன பெண்ணை மட்டுமே கட்டுப்படுத்துகின்றன. முறையற்ற பாலுறவுகளால் பெரிதும் பாதிக்கப்படுவது பெண்கள்தான் என்பதையும் இது ஆணாதிக்கச் சமூகம் என்பதால் பெண்தான் அனைத்திற்கும் பலியேற்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதையும் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

## முடிவுரை

மேலாண்மை பொன்னுச்சாமியின் உயிர்நிலம் நாவலில் முதன்மைப் பாத்திரத்துக்கு இணையாகப் பெண்ணின் பாத்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பரமசிவத்தின் மனைவியாகக் காமாட்சி அவரை விடவும் சக்திவாய்ந்தவளாக உழைப்பில் போட்டி போடுகிறவளாக இருக்கிறாள். இருவரிடையே உள்ள உறவு சமத்துவ மனப்பான்மையை வெளிப்படுத்துவதாக அமைகிறது. பாலுறவு நிலையில் முறையற்ற பாலுறவுகளால் பெண்கள் மட்டுமே பாதிக்கப்படும் சூழல் கூறப்படுகிறது. ஆணால் தீர்மானிக்கப்படுகிற உலகமாக இன்றைய உலகம் ஆக்கப்பட்டுள்ளதை வெளிப்படுத்தும் பாலுறவுப் பாத்திரங்களாக செண்பகம், ராசாத்தி ஆகிய பாத்திரங்கள் அமைகின்றன. முருகேசனுடன் திருமணத்திற்கு முன்னரான பாலுறவை மேற்கொள்ளும் செண்பகம் அதனால் அவனுக்குத் தலைக்குனிவு ஏற்படும் என்று அஞ்சுகிறாள். ராசாத்தி அழகேசனுடன் கொண்டிருக்கும் பாலுறவினால் சமூகத்தில் தனக்கும் அவனுக்கும் தன் மகளுக்கும் ஊறு நேரும் எனக் கருதுகிறாள்". எனவே செண்பகம், ராசாத்தி இருவருமே முறையற்ற பாலுறவின் மீதான அச்சத்தை வெளிப்படுத்தி அதனைத் தடுத்து நிறுத்துகின்றனர். பெண்கள்தான் ஆண்களின் தவறுக்கும் தண்டனை அனுபவிக்கிறார்கள் என்று ஆசிரியரின் கூற்றாக வெளிப்படுகிறது. இந்த நாவலில் பெண் பாத்திரங்கள் செயலூக்கம் மிக்கவையாகப் படைக்கப் பட்டுள்ளன.

**குறிப்புகள்**

1. மு.வரதராசன், இலக்கிய மரபு, பாரி நிலையம், சென்னை. 1968, ப.122.
2. எங்கெல்ஸ் (தமிழில் -நா.தர்மராஜன்), குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், கருத்துப் பட்டறை, மதுரை, 2008, ப.47.
3. து.சீனிச்சாமி, தமிழில் காப்பியக் கொள்கை பகுதி ஒன்று, பதிப்புத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2005, ப.156.
4. சுந்தர சண்முகனார், வீடும் விளக்கும், புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், புதுவை, 1947, ப.88.
5. அ.குணசேகரன், தமிழ் நாவல்களில் குடும்பச் சிதைவுகள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2006, ப.98.